# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 19.12.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

நாள்தோறும் பல்வேறு நோய்களுக்கு இரையாகின்ற கோடிக்கணக்கான மக்கள் உலகில் உள்ளனர். ஏதோவது ஒரு பெரிய மருத்துவமனையில் மனிதன் நுழைந்து விட்டால் உலகில் நோயாளிகளைத் தவிர வேறு யாருமே இல்லை என்பது போன்றே நமக்கு தோன்றுகிறது. மேற்கிலுள்ள முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் சிகிச்சைக்கான வசதிகள் உள்ளன. அதிலிருந்தும் ஒரு சாதாரண மனிதனால் பலன்பெற முடிகின்றது. ஆனால், மூன்றாவது உலக நாடுகளிலும் ஏழை நாடுகளிலும் நாம் ஆய்வு செய்து பார்த்தால் இலட்சக்கணக்கான நோயாளிகள் தங்களது ஏழ்மையின் காரணமாக அல்லது போதுமான வசதிகள் இல்லாததன் காரணமாக சிகிச்சை செய்யவே முடியாத நிலையில் இருப்பது தெரிய வருகிறது. நோயாளிகள் மிகவும் ஆதரவற்ற நிலையில் இருந்து வருகின்றார்கள். பிறகு அந்த நாடுகளிலுள்ள மருத்துவமனைகளின் நிலைமையும் இப்படித்தான் இருக்கின்றது. அந்த மருத்துவமனைக்குள் யார் சென்றாலும் அங்கு முழுமையான வசதிகள் இல்லை. வசதிகள் இருந்தாலும் மருத்துவர்கள் கிடைக்கமாட்டார்கள். அதன் காரணமாக சிகிச்சை செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது. நான் கூற வந்ததன் நோக்கம் உலகில் இலட்சக்கணக்கான மக்கள் நோயிற்கு இரையாகிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதேயாகும். எவர்களுக்கு சிகிச்சை செய்வதற்கான வசதிகள் கிடைத்து விடுகின்றதோ அல்லது எவருக்கு ஆரோக்கியமும், சுகமும் கிடைக்க வேண்டும் என்பது விதிக்கப்பட்டிருந்ததோ அவர்கள் நோயிலிருந்து குணமாகி விடுகின்றார்கள். மேலும் இவர்களில் ஒரு பெரும் எண்ணிக்கை தங்களது வாழ்வின் இறுதி நொடிகளை சென்றடைந்து விடுகின்றார்கள். இறுதியில் எந்த சிகிச்சையும் பலனளிக்காத நிலையில் அவர்கள் மரணித்து விடுகின்றார்கள்.

பலரும் தங்களது தவறுகளின் காரணமாக சில நோய்களுக்கு இரையாகி விடுகின்றார்கள். வெளிப்படையாகப் பார்க்கும் போது அவர்கள் வயதில் குறைந்தவர்களாகவும் நல்ல ஆரோக்கியமுள்ளவர்களாகவும் தென்படுவார்கள். சிறிய நோய்க்கு அவர்கள் ஆளானாலும் அல்லது சிறிதாக இருந்த நோய் ஒரே நொடியில் மிகவும் அபாயகரமானதாக ஆகிவிடுவதாலும் அவர்கள் சிகிச்சை செய்த பிறகும்கூட நலமடைவதில்லை. தங்களது வாழ்வை பாதுகாத்துக் கொள்ளத் தேவையான எல்லா வழிமுறைகளையும் அவர்கள் மேற்கொள்கின்றார்கள். ஆனால், அதற்கு முன்னரே அவர்களது வாழ்வின் இறுதி நொடிகள் வந்து விடுவதால் அவர்களது வாழ்க்கை முடிந்து போய் விடுகிறது. உலகில் எண்ணற்ற மக்களுக்கு தங்களது நோய்களுக்கு சிகிச்சை செய்து கொள்வதற்கான சக்தி படைத்தவர்களாக அவர்கள் இல்லை. அல்லது அவர்கள் இருக்கும் இடத்தில் அந்த சிகிச்சைக்கான வசதிகளே இருக்காது. அவ்வாறிருந்தும் இவர்களில் சிலரை பல அபாயகரமான நோய்களிலிருந்தும் அல்லாஹ் காப்பாற்றி விடுகின்றான். அதற்குப் பிறகு அவர்கள் நீண்ட நாட்கள் வாழ்கின்றார்கள். எல்லா விதமான சிகிச்சை முறையும் பயனளிக்காமல் போன பிறகு தங்களது சான்றோர்களில் எவராவது செய்த துஆக்களின் காரணமாக அல்லது வேறு எவராவது செய்த துஆவின் காரணமாக உடல்நலம் பெற்றவர்களாக ஆகி விடுகின்றார்கள். இந்த எல்லா விஷயங்களும் நல்ல இயல்புள்ள ஒரு மனிதனுக்கு நோய்க்கான சிகிச்சை செய்தாலும் செய்யாமல் இருந்தாலும் அல்லது சிகிச்சை செய்த பிறகும் குணமடையாமல் இருந்தாலும இந்த எல்லா செயல்பாடுகளுக்கும் பின்னால் ஒரு சக்தி தனது வேலையைச் செய்து கொண்டிருக்கின்றது என்பதன் பக்கம் கவனமூட்டக்கூடியதாக இருக்கின்றது. அவ்வாறு இருக்கவும் வேண்டும். சில நேரங்களில் எல்லா விதமான சிகிச்சை முறைகளும் தோல்வியடைந்த பிறகும் சிகிச்சையே இல்லாத நிலையில் இறைவன் முன்னால் நிம்மதியிழந்து மன்றாடுபவர்களின் நிம்மதியற்ற துஆக்களினால் வெளிப்படையாக பார்க்கும் போது மரணத்தின் வாசல் வரை சென்றுவிட்ட ஒரு மனிதன் அங்கிருந்து திரும்பி வந்து விடுகின்றான். குணம் பெறுவதற்கான வழி சிகிச்சை மட்டுமல்ல. மாறாக, சிகிச்சை செய்வது, செய்யாமல் இருப்பது ஆகிய இந்த இரண்டு நிலைமைகளிலும் அல்லாஹ்வே குணத்தை

வழங்குகின்றான் என்பதே இதிலிருந்து நிரூபணமாகின்றது. இதையே இஸ்லாம் நமக்கு எடுத்துரைக்கின்றது. இதில் ஒரு மூஃமினுக்கு முழுமையான நம்பிக்கை இருக்கின்றது. அவ்வாறு இருக்கவும் வேண்டும்.

ஒரு நல்ல இயல்புள்ள மனிதன் இதைப் பற்றி சிந்திக்கின்றான். ஆனால், ஒரு மூஃமின் உண்மையாகவே குணமளிக்கக்கூடியவன் இறைவன்தான் என்ற உறுதியில் நிலைத்து நிற்கின்றார். ஒரு மூஃமினுக்கு முன்னால் குணமடைகின்ற ஒவ்வொரு நோயாளியும் அல்லாஹ்வின் **ஸாஃபி** – குணமளிக்கக்கூடியவன் என்ற பண்பின் மீது அந்த மூஃமினுக்கு இருக்கும் நம்பிக்கையை மேலும் அதிகரிக்கச் செய்கின்றார். அல்லாஹ்வின் இந்த குணமளிக்கும் தன்மையானது மனிதர்களது வட்டத்திற்குள் மட்டும் இல்லை. மாறாக, எல்லா உயிரினங்களுக்கும், பிராணிகளுக்கும், பறவைகளுக்கும், செடி கொடிகளுக்கும் கூட இறைவன்தான் குணத்தை வழங்குகின்றான் என்பதற்கான உதாரணங்கள் இப்போது செய்யப்படும் ஆய்வுகள் மூலம் தெரிய வருகின்றது. விலங்குகள் தொடர்பாகவும் அவற்றின் ஆரோக்கியம் தொடர்பாகவும் செடி கொடிகள் தொடர்பாகவும் ஆய்வுகள் நடக்கின்றன. அவற்றிற்கான சிகிச்சைகளும் செய்யப்பட்டு வருகின்றன. அல்லாஹ்தான் மனிதனுக்கு இதற்கான வழிமுறைகளைக் காட்டுகின்றான். இந்த இந்த நோய்களுக்கு இதுதான் சிகிச்சையாக இருக்கின்றது. அந்த சிகிச்சையை செய்தால் குணம் பெறலாம் என்பதை இறைவன் தான் மனிதனுக்கு உணர்த்துகின்றான்.

வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகளைத் தவிர காடுகலுள்ள விலங்குகள் தொடர்பாகவும் இப்படிப்பட்ட ஆய்வு நடைபெற்று வருகிறது. ஆனால், சிறந்த படைப்பினமாக இருக்கின்ற மனிதனுக்கு அல்லாஹ் பௌதீகமான குணமளித்தலுடன் அவனது ஆன்மீக குணம் பெறுவதற்கான ஏற்பாட்டையும் செய்துள்ளான். மனிதனின் ஆன்மீக முன்னேற்றத்திற்காகவும் அவனுக்கு தனது நெருக்கத்தை வழங்குவதற்காகவும் ஆன்மீக நோய்களை அவனை விட்டும் அகற்றுவதற்காகவும் அல்லாஹ் தனது நபிமார்களையும் நல்ல மனிதர்களையும் உலகிற்கு அனுப்பி வைக்கின்றான். மனிதன் தனது அறிவை சரியாக பயன்படுத்தினால் இந்த விஷயத்தை சிந்தித்தவாறு அவன் இறைவன் முன்னால் குனிந்து விடுவான். அல்லாஹ் அவனது பௌதீக, ஆன்மீக குணம்பெறதலுக்கான ஏற்பாட்டை எவ்வாறு செய்துள்ளான்? என்பதை எண்ணியவாறு மனிதன் அவன் முன்னால் குனிந்து விடுவான். இப்போது நான் உடல்ரீதியாக நோய்கள் தொடர்பாக சில விஷயங்களை கூறி எவ்வாறெல்லாம் அல்லாஹ் தனது அடியார்கள் குணமடைவதற்கான ஏற்பாட்டை செய்துள்ளான் என்பதைப் பற்றி கூறவுள்ளேன். தனது மற்ற படைப்பினங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அல்லாஹ் மனிதனை நியமித்திருக்கின்றான். அவற்றிற்கும் சிகிச்சை அளிக்க வேண்டும் என அவன் விரும்புகின்றான்.

இன்றைய புதிய கண்டுபிடிப்புகளின், அறுவை சிகிச்சைக்கான புது சாதனங்களும், அதன் புதிய வழிமுறைகளின் மூலம் மனிதனுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதும் அதன் மூலமாக மனிதன் உடல்நலம் பெறுவதும் ஆகிய இவற்றிற்கு காரணம் மனிதன் அல்லாஹ் தனக்கு வழங்கியுள்ள அறிவை பயன்படுத்தினான் என்பதினாலேயாகும். அதன் மூலம் இந்த சிகிச்சை நடந்தது.

இன்று முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் நோயிலிருந்தும் சிகிச்சை மூலம் குணமடைந்தவர்களின் சதவிகிதம் மிகவும் சிறப்பாக இருந்து வருகிறது. பத்து அல்லது இருபது வருடங்களுக்கு முன்னர் இப்படிப்பட்ட சிகிச்சைகள் தொடர்பாக நாம் நினைத்துக் கூட பார்த்திருக்க முடியாது. ஆனால், அல்லாஹ் இன்றும்கூட குணமளிப்பவன் நீயல்ல. மாறாக, நான்தான் குணமளிக்கக்கூடியவன் என்பதை மனிதனுக்குப் புரிய வைப்பதற்காக முற்றிலும் இந்த நோயாளி குணமடைந்து விடுவார். இவர் உயிர் தப்பி விடுவார் என்று மருத்துவர்களுக்கு நூறு சதவிகிதம் நம்பிக்கையுள்ள சில case–களில் அந்த நோயாளிகளுக்கு அல்லாஹ் குணத்தை வழங்காமல் இருந்து விடுகின்றான்.

எனவே, ஒரு மூஃமின் எப்போதும் போலவே தான் நோய்வாய்ப்பட்டிருக்கும் சமயத்திலும் தனது பார்வையை மருத்துவர்களின் பக்கம் செலுத்துவதற்குப் பகரமாக தனக்கு குணத்தை வழங்கக்கூடிய இறைவன் பக்கம் அதனை செலுத்த வேண்டும்.

தன்னை மிகப்பெரும் சிகிச்சை அளிப்பவன் என்று கருதியவாறு பெரிய பேச்சுகளைப் பேசிக்கொண்டிருந்த ஒரு நபர் தொடர்பாக அவரிடம் இவ்வாறு கூறினார்கள்.

உண்மையான மருத்துவன் அல்லாஹ்தான். நீர் அனுதாபத்துடன் நடந்து கொள்ளும் ஒரு நபர் மட்டுமேயாவாய். யார் இந்த நோயைப் படைத்துள்ளானோ அவனே இந்த நோயின் அசல் மருத்துவனாவான்.

எல்லாமே இறைவன் புறமிருந்துதான் உருவாக்கப்படுகின்றது அல்லது மனிதத் தவறுகளின் விளைவாக இயற்கை சட்டத்திற்கேற்ப அதன் விளைவுகளை மனிதன் சுவைக்க வேண்டியதுள்ளது.

இந்தக் காலத்திலும் தனது எஜமானரை உண்மையாகப் பின்பற்றுகின்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடனும் ஒரு முறை இதே போன்ற ஒரு சம்பவம் நடந்தது.

தன்னைத் திறமையுள்ள மருத்துவராக எண்ணி செயல்பட்ட இறைவன் மீது முழுமையான நம்பிக்கையில்லாத செயல்பாட்டைக் காட்டிய ஒரு சிகிச்சையளிக்க வந்த நபரிடம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது வெறுப்பை வெளிப்படுத்திக் காட்டினார்கள். அவர் தனக்கு சிகிச்சை அளிக்க வேண்டாம் என்றும் அவர்கள் கூறினார்கள். இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முன்ஸி ஸபர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்.

ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களுக்கு கடுமையான தலைவலி இருந்து வந்தது. ஒரு மருத்துவர் தொடர்பாக இப்படிப்பட்ட நோய்களுக்கு சிகிச்சை வழங்குவதில் அவருக்கு குறிப்பான ஆற்றல் இருக்கின்றது என்று அவர்கள் கேள்விப்பட்டார்கள். அவரை சிகிச்சை செய்ய வரும்படி அழைப்பு விடுக்கப்பட்டது. மிகவும் தொலைவிலிருந்தும் அவர் வருவதற்காக செலவும் கொடுக்கப்பட்டு அவர் அழைத்து வரப்பட்டார். அவர் ஹுஸூர் அவர்களைப் பார்த்ததும் இரண்டு நாட்களிலேயே நீங்கள் சுகமடையும்படி நான் செய்து விடுவேன் என்று கூறினா. அந்த மருத்துவர் கூறியதைக் கேட்டு விட்டு ஹஸ்ரத் சாஹிப் உள்ளே சென்று விட்டார்கள். பிறகு ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் (ரலி) அவர்களுக்கு ஒரு சீட்டு எழுதிக் கொடுத்து அனுப்பினார்கள். அதில் இந்த நபரிடம் ஒருபோதும் நான் சிகிச்சை செய்து கொள்ள விரும்பவில்லை. இவர் தான் இறைவன் என்று வாதம் செய்கின்றாரா? என்று அந்த சீட்டில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதியிருந்தார்கள்.

அவர் திரும்பி செல்வதற்கான தொகையுடன் மேலும் 25 ரூபாய் வழங்கி அவரை திருப்பி அனுப்பும்படியும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். இவ்வாறு அந்த நபர் திருப்பி அனுப்பப்பட்டார்.

இதுதான் அல்லாஹ்வை சார்ந்திருப்பவர்களின வழிமுறையாகும். நோய் இருக்கும் சமயத்திலும் அல்லாஹ்வின் மீதுதான் அவர்களுக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது. எந்த மருத்துவர் மீதும் எந்த மருந்தின் மீது அவர்களுக்கு நம்பிக்கை இருந்ததில்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றிய, அன்னாரின் உண்மைப் பேரன்பர் பின்பற்றிய இந்த முன்மாதிரியை நாமும் பின்பற்றி நடக்க வேண்டும்.

ஒரு நீண்ட காலம் மனிதனை உயிருடன் வைக்கக்கூடிய Life Support மெஷின்கள் இப்போது வந்துள்ளது. மருந்துகளை பயன்படுத்துவதிலும் புதிய புதிய வழிமுறைகள் வந்து விட்டன. மக்களது வயதும் இப்போது அதிகரித்து விட்டது. இன்றிலிருந்து சில வருடங்களுக்கு முன்னால் எந்த நோய்க்கு சிகிச்சையே இல்லை என்று கருதப்பட்டு வந்ததோ அந்த நோய்க்கு சிகிச்சை அளிப்பது இன்று சாதாரணமானதாகி ஆகி விட்டது. மருத்துவத்தில் ஏற்பட்டுள்ள இந்த முன்னேற்றத்தின் விளைவாக மனிதன் அல்லாஹ்வின் ஆட்சியில் அல்லது அவனது பண்புகளில் சரிசமமான பங்குதாரராக ஆகி விட்டான் என்று நாம் கருதிவிடக் கூடாது. மாறாக, இதுவும் கூட அல்லாஹ்வின் அருளாகும். அவனே புதிய சிகிச்சைகளை கண்டுபிடிப்பதற்கும் அவற்றின் மூலம் அல்லாஹ் அருள் செய்தவாறு மனிதனுக்கு குணமளிப்பதற்குமான அறிவை மனிதனுக்கு வழங்கியுள்ளான்.

அல்லாஹ்தான் குணமளிக்கக்கூடியவனாக இருக்கின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டிருப்பது போன்றே மனிதன் அனுதாபத்துடன் நடந்து கொள்ளும் ஒரு நபர் மட்டுமேயாவான்.

நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஆய்வுகளை மேற்கொள்கின்ற ஒவ்வாருவரும், அவ்வாறே ஒவ்வொரு மருத்துவரும் தன்னைப் போன்ற மற்ற மனிதர்களுடனும் தனக்குக் கீழுள்ள நோயாளிகளுடனும் அனுதாபத்துடன் நடந்து கொண்டவாறு மனித இனத்தின் சிறந்த நிலைக்காக முயற்சிகளைச் செய்ய வேண்டும். இதுவே ஒரு மூஃமினின் மகிமையாகும். மற்றவர்கள் இவ்வாறு சிந்திப்பதில்லை. ஆனால், ஒரு அஹ்மதியின் சிந்தனை இப்படித்தான் இருக்க வேண்டும். ஆய்வுகளை நடத்துகின்ற மருத்துவராக இருக்கின்ற ஒவ்வொரு அஹ்மதியும் தனது நோயாளிகளுக்காக இப்படிப்பட்ட மனிதநேய உணர்வுகளுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வின் அருளால் ரப்வாவிலுள்ள மருத்துவமனையிலுள்ள நமது மருத்துவர்களும், ஆப்பிரிக்காவிலுள்ள நமது மருத்துவர்களும் தான் எழுதும் மருந்து சீட்டிற்கு மேல் **ஹுவஸ்ஸாபி** – அவனே குணமளிக்கக் கூடியவன் என்று எழுதுகின்றார்கள். உலகிலுள்ள எல்லா மருத்துவர்களும் உலகின் ஒவ்வொரு இடத்திலும் இவ்வாறே எழுதி வந்தால், மேலும் அத்துடன் அதன் மொழியாக்கத்தையும் எழுதி வந்தால் இதுவும்கூட மற்றவர்களிடம் ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வி**ஷ**யமாக இருக்கும். மேலும் அல்லாஹ்வின் அருளை ஈர்க்கக்கூடியதாகவும் அது இருக்கும். அதன் காரணமாக அல்லாஹ் அவர்களது கைகளில் குணமளிக்கும் தன்மையையும் வழங்குகின்றான். பெரும்பாலான பழைய மருத்துவர்களும் இந்த வழிமுறையைப் பின்பற்றிச் செயல்படுகின்றார்கள் என்று நான் நம்புகின்றேன். ஆனால், இளைஞர்களாக இருக்கின்ற பல மருத்துவர்களும் இதன் பக்கம் கவனம் செலுத்தாமல் இருக்கலாம் அவர்களுக்கும் இதுபற்றி நான் கவனமூட்ட விரும்புகின்றேன்.

சிகிச்சை செய்கின்ற ஒவ்வொரு அஹ்மதியும் ஒருவருக்கு சிகிச்சை வழங்குகின்ற போது அல்லாஹ் வழங்குகின்ற அறிவு, சிந்திக்கும் திறன் ஆகியவற்றின் மூலம் நான் சிகிச்சை செய்கின்றேன். ஆனால், இறைவன்தான் குணமளிக்கக்கூடியவன் என்பதை தனது மூளையில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அந்த இறைவனின் கட்டளை செயல்பட்டால் எனது சிகிச்சை நோயாளிக்கு பயன்தரும் என்ற சிந்தனை ஒரு மருத்துவருக்கு இருந்தால் அப்படிப்பட்ட மருத்துவருக்கு நிச்சயமாக துஆவின் பக்கமும் கவனம் ஏற்படும். துஆவின் பக்கம் கவனம் ஏற்படுவதால் அதன் விளைவாக அந்த மருத்துவரின் கைகளால் மக்கள் குணமடைகின்றபோது இறைவன் மீதுள்ள நம்பிக்கையும் அவருக்கு அதிகமாகி விடும். இவ்வாறு அவரது ஆன்மீகத்திலும் முன்னேற்றம் ஏற்படும். இவ்வாறே ஒரு நோயாளியும் இந்த மருத்துவர் எனக்கு சிகிச்சை வழங்கினால் நான் குணமடைந்து விடுவேன். இந்த மருத்துவமனைதான் எல்லாவற்றையும் விட சிறந்த மருத்துவமனையாக இருக்கின்றது. அங்கு சென்றால் நான் நலம் பெற்று விடுவேன் என்று ஒருபோதும் நினைக்கக் கூடாது. சிறந்த மருத்துவ வசதிகள் மூலம் பலன்பெற வேண்டும் என்பது சரிதான். ஆனால், முழுமையாக அவற்றை மட்டும் சார்ந்து ஒரு மனிதனால் இருந்துவிட முடியாது. மாறாக, குணமளிக்கக்கூடியவன் இறைவன்தான் என்பதை எப்போதும் சிந்திக்க வேண்டும். அல்லாஹ்வின் கட்டளை செயல்பட்டால் நான் குணமடைவேன். எந்த மருத்துவர் மூலமாக ஒரு நோயாளி தனது சிகிச்சையை மேற்கொள்கின்றாரோ அந்த மருத்துவரின் கையில் அல்லாஹ் குணமளிக்கும் தன்மையை வைப்பதற்காக அந்த நோயாளி துஆ செய்ய வேண்டும்.

தனக்காகவும் தனது உறவினர்களுக்காகவும் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கும் சமயத்தில் துஆவிற்காக எனக்கு எழுதப்படும் பல கடிதங்களும் எனக்கு வருகின்றன. அல்லாஹ்வின் அருளால் சிகிச்சை பயன்தர அல்லாஹ்வின் மீது மிகப்பெரும் நம்பிக்கை அஹ்மதிகளுக்கு இருக்கின்றது என்பது வெளிப்படையாக இதன் மூலம் தெரிகிறது. ஆனால், இவ்வாறிருந்தும் சில நபர்களது இயல்பில் இந்த மருத்துவரிடம் சிகிச்சை செய்தால்தான் அதில் எனக்கு வெற்றி கிடைக்கும் என்ற எண்ணம் இருக்கின்றது. எனவே, இந்த வி**ஷ**யமும் ஒரு வகையில் மறைவான **ஷி**ர்க்காக இருக்கின்றது.

இது தொடர்பாக மிக திறமை பெற்ற மருத்துவராக விளங்கிய ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடன் நடைபெற்ற பல சம்பவங்கள் இருக்கின்றன. அதில் ஒரு சம்பவத்தை நான் விளக்கவுள்ளேன். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்.

எனக்கு ஒரு சகோதரி இருந்தார்கள். அவர்களுக்கு ஒரு மகன் இருந்தார். அந்த மகன் வயிற்றுப்போக்கு நோயால் பாதிக்கப்பட்டு இறந்து விட்டார். அந்த மகன் இறந்து சில நாட்கள் கழிந்ததும் நான் அந்த இடத்திற்கு சென்றேன். அதே இடத்தில் வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளி எனது கைகளால் குணமடைவதை எனது சகோதரி பார்த்தார்கள். அதைப் பார்த்து விட்டு சகோதரரே! நீர் இங்கு வந்திருந்தால் எனது மகனும் உயிர் தப்பியிருப்பார் என்று எனது எனது சகோதரி என்னிடம் கூறினார். அதற்கு நான் உனக்கு இன்னொரு மகன் பிறப்பான். அவன் என் கண் முன்னாலேயே வயிற்றிப்போக்கு நோயால் இறந்து போய் விடுவான் என்று என் சகோதரியிடம் கூறினேன்.

அதற்குப் பிறகு எனது சகோதரி கர்ப்பம் தரித்தாள். அவருக்கு அழகான ஒரு மகன் பிறந்தான். இறுதியில் அவன் வயிற்றுப்போக்கு நோயால் அவதிப்பட்ட சமயத்தில் எனது சகோதரிக்கு நான் அவரிடம் கூறிய விஷயம் நினைவுக்கு வந்தது. அவர் என்னிடம் துஆவிற்காக வேண்டினார். நான் என் சகோதரியிடம் அல்லாஹ் உங்களுக்கு இதற்குப் பகரமாக இன்னொரு மகனை தருவான். ஆனால், இந்த மகனை அவன் செல்லும் இடத்திற்கு செல்ல விட்டு விடுங்கள் என்று கூறினேன். இறுதியில் இந்த மகன் இறந்தார். அதற்குப் பிறகு இன்னொரு மகன் அவருக்கு பிறந்தான். இதுவரை அந்த மகன் உயிருடன் இருந்து வருகின்றான். தனது பணிகளைச் செய்து வருகின்றான். இதுதான் இறைவனின் தன்மான உணர்வாகும்.

இதைப் போன்ற இன்னொரு சம்பவம் ஹஸ்ரத் மீர் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் (ரலி) அவர்களது வாழ்வில் நடந்துள்ளது. அவர் இவ்வாறு எழுதுகின்றார்:

நான் 1907 -ல் லாஹூரில் House Surgeon ஆக இருந்த சமயத்தில் எனது மனைவியின் மூத்த சகோதரி தனது சகோதரியை சந்திப்பதற்காக வந்திருந்தார். ஒரு மாதம் அல்லது அதற்கும் குறைவான நாட்கள் வரை அவர் எனது வீட்டில் தங்கியிருந்தார். அவர்கள் எனது மனைவியின் சகோதரி மட்டுமல்ல. எனது பெரியம்மாவின் மகளுமாவார். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அது சில மாதங்கள் உயிருடன் இருந்த பிறகு இறந்து விட்டது. தனது மகள் மரணமடைந்த அந்த துக்கத்தை மறப்பதற்காகவே தனது தங்கை வீட்டிற்கு அவர்கள் வந்திருந்தார்கள். இங்கு வந்த பிறகு அவர்கள் ஒரு விஷயத்தை மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தார்கள். அதாவது எனது மச்சானானா டாக்டர் சாஹிப் (அதாவது டாக்டர் மீர் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப்) எனது பக்கத்தில் இருந்திருந்தால் எனது இந்த மகள் இறந்திருக்கமாட்டாள் என்று பலமுறை அவர்கள் கூறிக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு பலமுறை அவர்கள் கூறியதன் காரணத்தால் எனக்கு இறைவனைப் பற்றிய தன்மான உணர்வு ஏற்பட்டது. நான் அவர்களிடம் கண்டிப்பாக உமக்கு ஒரு மகன் பிறப்பான். அவர் எனது சிகிச்சையின் கீழ் இருந்தவாறு எனது கைகளாலேயே மரணமடைவான் என்று கூறினேன். அதற்குப் பிறகு அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். தனது அந்த குழந்தையுடன் தனது தங்கையை சந்திப்பதற்காக அவர்கள் வந்தார்கள். பயணத்தின்போது குழந்தைக்கு கொடுக்க வேண்டிய பாலை மிகவும் அதிகமாக கொதிக்க வைத்ததால் அந்த பால் திரிந்தது. அந்த பாலையே அவர்கள் தனது குழந்தைக்கு கொடுத்து வந்ததன் விளைவாக குழந்தைக்கு உடல்நலமில்லாமல் ஆனது. அதற்காக எல்லாவிதமான சிகிச்சையும் செய்யப்பட்டது.

டாக்டர் சாஹிபும் இந்த குழந்தைக்கு சிகிச்சை அளித்தார்கள். அந்த குழந்தைக்கு ஏற்பட்ட வயிற்றுக்கோளாறை சரி செய்ய மற்றவர்களும் சிகிச்சை செய்தார்கள். ஆனால் குழந்தைக்கு சுகம் கிடைக்கவில்லை. இரண்டு வாரங்கள் இவ்வாறே நோய்வாய்ப்பட்டிருந்து இறுதியில் அந்த குழந்தை இறந்து விட்டது. ஆண் குழந்தை இல்லாத காரணத்தால் இந்த சம்பவம் நடப்பதற்கு ஆறு அல்லது ஏழு வருடத்திற்கு முன்பு நான் கூறிய அந்த விஷயம் நினைவில் வந்தது. அதாவது உங்களுக்கு மகன் பிறப்பான். அவன் எனது கைகளால் இறந்து விடுவான் என்று கூறியது எனக்கு நினைவில் வந்தது என்று டாக்டர் சாஹிப் கூறுகின்றார்கள்.

இதன் மூலமாக இவர்களிடம் இருக்கும் அந்த ஷிர்க் உடைய வேண்டும் என்று நான் விரும்பினேன். நான் விரும்பியது போன்றே நடந்தது. ஆக, இப்படிப்பட்ட நன்மக்கள் எல்லாவிதமான மறைவான ஷிர்க்கிலிருந்தும் தன்னையும் காப்பாற்றிக் கொண்டு மற்றவர்களுக்கும் இறைவனது இருப்பு தொடர்பாக சரியான அறிமுகத்தை வழங்கி அவர்களையும் ஷிர்க்கிலிருந்து காப்பாற்றுபவர்களாக அவர்கள் இருந்தார்கள். அவர்களது உள்ளம் இறைவன் மீதுள்ள நம்பிக்கையால் நிறைந்திருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூய்மைப்படுத்தும் ஆற்றலானது மேலும் அவர்களை ஒளிமயமாக்கியது. எனவே, மருத்துவர்கள் வழங்கும் மருந்து அல்லது அவர்கள் அளிக்கும் சிகிச்சை ஆகியவை அதில் அல்லாஹ்வின் விருப்பம் இருந்தால்தான் பயனளிக்கக்கூடியதாக இருக்கும் என்பதை எப்போதும் நினைவில் வைக்க வேண்டும். எனவே, இந்த இறைவனின் பண்பை தொடர்புபடுத்தி நோயாளி துஆ செய்ய வேண்டும்.

ஒவ்வொரு நோய்க்கும் அல்லாஹ் மருந்தை வைத்துள்ளான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆய்வு செய்பவர்கள் பல்வேறு நோய்களுக்கான பல்வேறு சிகிச்சை முறைகளை மேற்கொள்கின்றார்கள். அவர்கள் இறைவன் படைத்த பொருள்களிலிருந்து தான் பலன்பெறுகின்றார்கள். எண்ணற்ற மூலிகைகள் இறைவனால் படைக்கப்பட்டவையாக இருக்கின்றன. சில கிருமிகள், பூச்சிகள், விஷப்பிராணிகள் ஆகியவற்றிலிருந்த வெளிப்படும் விஷத்தில்கூட அல்லாஹ் நோய்களுக்கு குணமளிக்கும் தன்மையை வைத்திருக்கின்றான். பாம்பின் விஷத்திலிருந்துகூட மருந்துகள் தயாரிக்கப்படுகின்றது. அதே விஷம், பாம்பு ஒரு மனிதனை கொத்துகின்றபோது நேரடியாக மனிதனின் உடலுக்குள் சென்று விட்டால் அது மனிதனின் மரணத்திற்கு காரணமாக ஆகிவிடுகின்றது. ஆனால், இதே விஷம் மருந்தாக பயன்படுத்தப்படும்போது அது விஷத்தை முறிக்கக்கூடியதாக உருவாகி விடுகிறது. எனவே, சிகிச்சை செய்வதற்காக மருந்துகளை கிடைக்கும்படி செய்திருப்பதுகூட அல்லாஹ் நம்மீது செய்துள்ள அருளாகும். பிறகு அல்லாஹ் மனிதனுக்கு அறிவையும் வழங்கியுள்ளான். அதை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதைப் பற்றியும் அவன் கூறியுள்ளான்.

திருக்குர்ஆனில் குணமளித்தல் தொடர்பாக குறிப்பாக தேனைப் பற்றிய குறிப்பு இருக்கின்றது. அதுபற்றி ஷிஃபாஉன் லின்னாஸ் – அதில் மனிதனுக்கு குணமளிக்கும் தன்மை இருக்கின்றது என்று கூறப்பட்டிருக்கின்றது. இந்த விஷயத்தை முஸ்லிம்களை விட முஸ்லிம் அல்லாதவர்கள் நன்றாக புரிந்து கொண்டார்கள். தேன் தொடர்பாகவும், அதன் பல்வேறு வகைகள், சிறப்புகள் தொடர்பாகவும் எந்த அளவு ஆய்வு நடைபெற்றுள்ளதோ அதுபற்றி பல்வேறு கருத்துகளும் கூறப்படுகின்றன. Royal Jelly –க்கும் பல சிறப்புத்தன்மைகள் இருக்கின்றன. ஆக, உலகில் தேன் தொடர்பாக எண்ணிலடங்கா ஆராய்ச்சிகள் நடக்கின்றன. பல ஆய்வுகளும் ஏற்கனவே நடந்து விட்டன. புரோப்பல்லஸ் என்ற மருந்தும் தேனிலிருந்தே உருவாக்கப்பட்டது. எந்த மருந்தின் மூலமாகவும் குணமடையாத சில காயங்களுக்கு தேன் மூலமாக செய்யப்பட்ட Ointment மூலமாக குணம் கிடைத்துள்ளது.

ஆனால், இன்றைய நாட்களில் தேன்கூடுகள் மீது ஒரு குறிப்பிட்ட பூச்சி மூலமாக தாக்குதல்கள் நடைபெற்று வருகிறது. அதன் காரணமாக தேன்கூட்டை பராமரிப்பவர்கள் அல்லது தேன் தொடர்பாக ஆய்வு செய்பவர்கள் மிகவும் கவலையடைந்துள்ளார்கள். குறிப்பிட்ட ஒரு நாட்டில் மட்டுமின்றி உலகில் விரிவாக பல பகுதிகளிலும் தேன்கூடுகள் மீது இந்த பூச்சிகளின் தாக்குதல்கள் இருந்து வருகிறது. இந்த பூச்சியின் தாக்குதலானது தேனீக்களின் மரணத்திற்கு காரணமாக அமைந்திருக்கின்றது. தேன் கூடுகளில் பல பாதுகாப்புத் தடைகள் இருக்கத்தான் செய்கின்றது. அந்த தேன்கூடுகளில் நுழைவதற்கு முன்பே Antibiotic பொருள் ஒன்று அதில் தொங்கிக் கொண்டிருக்கும். தேனீக்கள் தம்மை அதன் மூலமாக சுத்தப்படுத்திக் கொள்கின்றன. இப்படிப்பட்ட தடைகளையெல்லாம் கடந்து இந்த பூச்சிகள் இந்த தாக்குதலை நடத்தி வருகிறது. அது தேனீக்களின் மரணத்திற்குக் காரணமாக இருக்கின்றது. இதன் காரணமாக தேன்கூட்டை பராமரிப்பவர்களும் தேன் தொடர்பாக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர்களும் மிகவும் கவலையடைந்துள்ளனர். இது தொடர்பாகவும் பெரும் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. இந்த பூச்சியை எப்படி அழிப்பது? இந்த நோயிலிருந்து எப்படி விடுதலை பெறுவது? என்பது தொடர்பாக இந்த ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

இதே நிலை நீடித்தால் சில வருடங்களில் தேனீக்களே இல்லாத நிலை ஏற்பட்டு விடும் என்று சிலர் கூறுகின்றனர். அல்லது சில இடங்களில் தேனீக்கள் மிகவும் குறைவாகத்தான் இருக்கும் என்றும் கூறப்படுகிறது. ஆனால், இவர்களின் கணிப்பு தவறானது என்று நான் கூறுகின்றேன். தேனீக்கள் அழிந்து விடும். தேன் இல்லாமல் ஆகி விடும் என்ற இவர்களது கணிப்பு தவறானதாகும். ஏனென்றால், திருக்குர்ஆன் தேனியை உதாரணமாக குறிப்பிட்டுக் கூறியிருப்பதே அது முடிந்து விடாது என்பதற்குரிய உத்திரவாதமாக இருக்கின்றது. திருக்குர்ஆன் உலகம் உள்ளவரை இருக்க வேண்டியது இருப்பதால் அதில் அல்லாஹ்

குறிப்பிட்டுக் கூறியுள்ள அந்த பொருள்களில் உள்ள குணம் அளிக்கும் தன்மையும் அத்துடன் நிலைத்திருக்கும். அல்லாஹ் மனிதர்களிடத்தில் பரவியுள்ள ஷிர்க்கின் காரணமாகவும் தனது வல்லமையைக் காட்டுவதற்காகவும் தண்டனையாக இந்த பொருள்களை சில பகுதிகளில் குறைத்து விடலாம். அஹ்மதிகளும் இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளில் ஈடுபட வேண்டும்.

ஏனென்றால், தேனீக்களின் தொடரும் இறைவனது வஹீயுடன் இணைந்திருக்கின்றது. எனவே, ஏகத்துவத்துடனும் இறைவனது வஹீயுடனும் குறிப்பாக இணைந்திருப்பவர்களுக்கு அல்லாஹ் உதவி செய்வான். இந்த சிந்தனையின் காரணமாக நான் அஹ்மதிகளிடம் கூறிக்கொள்வது என்னவென்றால் தேனீக்கள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு அஹ்மதிகள் முன்வர வேண்டும். வெளியிலிருந்து வரும் பூச்சிகள் தேன்கூடுகளில் நிகழ்த்தியிருக்கும் இந்த தாக்குதல்களுக்கான காரணத்தை அவர்கள் தேட வேண்டும். யாராவது அஹ்மதி இந்த Field –ல் இருக்கின்றாரா? என்பதைப் பற்றி எனக்கு தெரியாது. யாராவது இருந்தால் அவர் எனக்கு இதுபற்றி தெரிவியுங்கள்.

இத்துடன் நான் இன்னொன்றையும் கூறுகின்றேன். சில வருடங்களாக நான் அஹ்மதி மாணவர்களிடம் அவர்கள் எல்லா விதமான ஆராய்ச்சிக்காகவும் முன்வர வேண்டும் என்று நான் கூறியிருந்தேன். இந்த களம் மிக விரைவாக இந்த நாடுகளில் காலியாகி கொண்டிருக்கின்றது. உலகத்திற்கு இதன் தேவை இருக்கின்றது. இதனால் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் அஹ்மதிகளின் பாதங்கள் நிலைபெற்று விடும். இந்த Research காரணமாக தங்களது நாடுகளின் முன்னேற்றத்திலும் அஹ்மதிகள் பெரும் பங்கு வகிப்பவர்களாக இருப்பார்கள்.

அல்லாஹ் நோய்களுக்கான சிகிச்சையையும் உருவாக்கியுள்ளான் என்பதைப் பற்றி நான் கூறிக்கொண்டிருந்தேன். அதைப் பற்றி திருக்குர்ஆனிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. நபிமொழிகளிலும் இதுபற்றிய குறிப்பு காணப்படுகிறது. இது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சில நபிமொழிகளை உங்கள் முன்னால் வைக்கின்றேன் அவற்றில் அவர்கள் சில பொருள்களை சில நோய்களுக்கான சிகிச்சையாக குறிப்பிட்டுள்ளார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் நோயாளியாக ஆனபோது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனது உடல்நலத்தைப் பற்றி விசாரிப்பதற்காக வந்தார்கள். தனது கைகளை எனது நெஞ்சில் அவர்கள் வைத்தார்கள். எதுவரையென்றால் அந்த கைகளிலுள்ள குளிர்ச்சியை எனது நெஞ்சு உணர்ந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னைப் பார்த்து உங்களுக்கு இதய நோய் இருக்கின்றது. நீங்கள் ஸகீஃப் கோத்திரத்தைச் சேர்ந்த ஹாரிஸ் பின் கல்தா அவர்களிடம் செல்லுங்கள். அவர் மருத்துவம் செய்து வருகிறார். அவர் ஏழு அஜ்வா என்னும் உயர்தர பேரீத்தம்பழங்களை அதன் கொட்டைகளுடன் சேர்த்து அரைத்துவிட வேண்டும். பிறகு அவற்றிலிருந்து மருந்து தயாரித்து அதை உங்கள் வாயில் போட வேண்டும். எனவே, இதய நோய்க்கு அஜ்வா என்னும் உயர் ரக பேரீத்தம்பழங்களை உபயோகிக்கும்படி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிப்பு செய்கின்றார்கள்:**

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூன்றில் (நோய்க்கு) குணமளிக்கும் தன்மை உண்டு. தேன் அருந்துவது, இரத்தம் வெளியேற்றும் கருவியால் (உடலில்) கீறுவது அதாவது அறுவை சிகிச்சை செய்து கொள்வது, தீயால் சூடிட்டுக் கொள்வது ஆகியனவே அந்த மூன்றுமாகும்.

நெருப்பு மூலமாகவும் காயங்களை எரித்து சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதே நபிமொழியில் தீயால் சூடிட்டுக் கொள்ள வேண்டாமென என் சமுதாயத்தினருக்கு நான் தடை விதிக்கிறேன் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் காலித் பின் சஅத் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

எங்களுடன் ஃகாலிப் பின் அப்ஜர் (ரலி) அவர்கள் இருக்க நாங்கள் பயணத்தில் சென்றோம். வழியில் ஃகாலிப் பின் அப்ஜர் (ரலி) அவர்கள் நோய்வாய்ப்பட்டார்கள். அவர்கள் நோயாளியாக இருக்கும்

நிலையிலேயே நாங்கள் மதீனா சென்றோம். ஃகாலிப் (ரலி) அவர்களது உடல்நலம் விசாரிப்பதற்காக அபூ அத்தீக் அவர்கள் வந்தார்கள்.

அப்போது அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள்:

இந்த சின்னஞ்சிறு கருப்பு வித்தை (கருஞ்சீரகத்தை) நீங்கள் பயன்படுத்துங்கள். இதிலிருந்து ஐந்து அல்லது ஆறு வித்துகளை எடுத்துத் தூளாக்கி அதை எண்ணெயுடன் சேர்த்து எண்ணெய்ச் சொட்டுகளை அவரது மூக்கில் இடுங்கள். அவருடைய மூக்கில் அந்தப் பக்கத்திலும் அதன் எண்ணெய்ச் சொட்டுகளை விடுங்கள். ஏனெனில், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் என்னிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த கறுப்பு வித்தானது எல்லா நோய்க்கும் நிவாரணமாகும். சாம் – ஐ தவிர என்று கூறியதை நான் கேட்டிருக்கிறேன் என்று தெரிவித்தார்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் சாம் என்றால் என்ன என்று கேட்டதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணம் என்று பதிலளித்தார்கள்.

இங்கு கறுப்பு வித்து என்று கூறப்பட்டிருப்பது Kalonji ஆகும்.

**ஹஸ்ரத் சயீத் பின் ஸைத் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சமையல் காளான் மண்ணு வகையைச் சார்ந்தது. அதன் சாறு கண்ணுக்கு குணமளிக்கக்கூடியதாக இருக்கின்றது என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காய்ச்சல் நரகத்தின் வெப்பக் காற்றிலிருந்து வந்ததாகும். ஆகவே, அதைத் தண்ணீரால் (குளிர்வித்து) தணியுங்கள் என்று கூறினார்கள்.

ஒரு அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஒரு முறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கடுமையான காய்ச்சல் இருந்தது. அவர்களை உடல்நலம் விசாரிக்க சென்ற நபித்தோழர் அவர்களுக்கு மேல் தண்ணீர் பை தொங்கிக் கொண்டிருப்பதையும் அதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக தண்ணீர் அவர்களது உடலில் வீழ்வதையும் பார்த்தார்கள். எனவே, இந்த சிகிச்சையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்காகவும் செய்துள்ளார்கள்.

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களில் எவராவது ஒருவரின் பாத்திரத்தில் ஈ விழுந்து விட்டால் அவர் அந்த ஈயை முழுமையாக அதில் மூழ்கும்படி செய்ய வேண்டும். பிறகு அந்த ஈயை வெளியில் எறிந்துவிட வேண்டும். ஏனென்றால், அதன் சிறகுகளில் ஒன்றில் குணமளிக்கும் தன்மையும் மற்றொன்றில் நோயும் இருக்கின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஈ தொடர்பாக 1400 வருடங்களுக்கு முன்னர் நமக்கு கூறியிருப்பது தொடர்பாக இன்றைய விஞ்ஞானிகளும் கூட ஆராய்ச்சி செய்து வருகின்றார்கள். மேலும் அதில் பாக்டீரியாவை அழிக்கின்ற ஒரு பொருள் இருப்பதாக அவர்கள் கூறுகின்றார்கள். Research செய்பவர்கள் ஈயை Ethanol –ல் முக்கி அதனை சில வகை பாக்டீரியாக்களுடன் சேர்ந்த கலவையை அதன் மீது பயன்படுத்திப் பார்த்த போது அந்த ஈயிலுள்ள Antibiotic தனது வேலையைச் செய்ததை அவர்கள் கண்டறிந்தார்கள். அந்த Antibiotic காரணமாக அந்த பாக்டீரியாக்கள் இறந்தன.

Tokyo பல்கலைக்கழகத்தின் Professor ஒருவர் ஒரு ஆராய்ச்சியை செய்துள்ளார். அவர் இவ்வாறு எழுதுகின்றார்:

எதிர்காலத்தில் மிக விரைவில் மருத்துவமனைகளில் ஈக்கள் Antibiotic ஆக பயன்படுத்தப்படுவதைக் கண்டு மக்கள் வியப்படைவார்கள். ஈக்களில் தற்காப்பு ஆற்றலை உருவாக்குகின்ற பொருள்களும் வெளிவருகின்றன.

ஈக்கள் தொடர்பான ஆராய்ச்சியை செய்வதற்கான எண்ணம் விஞ்ஞானிகளுக்கு ஏற்பட்டதற்கு இன்னொரு காரணம் ஈக்கள் மிகவும் அசுத்தமான இடங்களில்தான் அமர்கின்றது. பல்வேறு நோய்களை

அது பரப்பிக் கொண்டிருக்கிறது. பல்வேறு நோய் கிருமிகள் இதனுள் இருக்கின்றன. ஆனால் அந்த ஈ எந்த நோயின் தாக்கத்திற்கும் ஏன் ஆளாகுவதில்லை? என்ற இந்த விஷயம்தான் இத்தகைய ஆராய்ச்சியை விஞ்ஞானங்கள் செய்வதற்கு காரணமாக இருந்திருக்கின்றது.

அப்போதுதான் Antibacterial இருக்கும் சில பொருள்கள் அதில் இருப்பது அவர்களுக்கு தெரிய வந்துள்ளது. ஈ ஒரு திரவப் பொருளில் விழுகின்றபோது அதன் சிறகிலுள்ள நோய்க்கிருமிகள் அந்த திரவப்பொருளை உடனடியாக மோசமாக்கி விடுவதையும் அதன் பாதிப்பு ஆரம்பமாவதையும் அவர்கள் கண்டறிந்தார்கள். ஆனால், அந்த ஈயை முழுமையாக அந்த திரவப் பொருளில் மூழ்கும்படி செய்துவிட்டால் அதிலிருந்தும் எப்படிப்பட்ட Enzyme வெளிப்படுகின்றனவென்றால் அதற்கருகிலுள்ள Bacteria உடனடியாக அழிந்து விடுகின்றன. ஆக, இதுதான் இஸ்லாம் கூறும் குணமளிக்கக்கூடியவனாக இருக்கக்கூடிய இறைவனின் மகிமையாகும். சிகிச்சைக்கான இந்த வழிமுறையை தனது நபிக்கு அந்த இறைவன் 1400 வருடங்களுக்கு முன்னரே கற்றுத் தந்துள்ளான். அதன் மீது இன்று உலகம் ஆராய்ச்சி செய்து வருகிறது. இந்த எல்லா சிகிச்சையின் வழிமுறைகளையும் சுட்டிக்காட்டிய பிறகும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னை ஏற்றுக் கொண்டவர்களிடம் குறிப்பாக துஆதான் சிகிச்சையாக இருக்கின்றது என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். மேலும் சதகா கொடுப்பது சிகிச்சையாகும் என்றும் கூறியுள்ளார்கள். நோய்க்கான சிகிச்சை செய்வதுடன் சதகா கொடுத்து துஆவும் செய்யும்படி அவர்கள் கூறியுள்ளார்கள்.

நீங்கள் உங்களது நோயாளிகளுக்கான சிகிச்சையை சதகா மூலமாக செய்யுங்கள். உங்களது செல்வங்களை ஸக்காத் கொடுப்பது மூலமாக பாதுகாத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால், இது துன்பங்களையும் நோய்களையும் அகற்றி விடுகின்றது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதாக ஒரு ஹதீஸில் இருக்கின்றது.

இன்னொரு நபிமொழியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக ஹஸ்ரத் ஆயி–ா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அறிவிக்கின்றார்கள்:

தங்கள் வீட்டிலுள்ளவர்களுக்காக இறைவனிடம் அடைக்கலம் கேட்கும் போது தனது வலக்கையால் எங்களை தொட்டவாறு இவ்வாறு கூறுவார்கள்.

அல்லாஹ்வே! மக்களின் இறைவனே! நோயை அகற்றுவாயாக! நீயே குணமளிக்கக் கூடியவனாவாய். உனது குணமளித்தலைத் தவிர வேறு எந்த குணமளித்தலும் இல்லை. நோயின் எந்த அடையாளமும் எஞ்சியிருக்காத வகையில் நீ குணமளிப்பாயாக.

அந்த துஆ இதுவாகும்.

**அல்லாஹும்ம ரப்புன்னாஸி அஸ்ஹபுல் பஃஸ் இஷ்பி வ அன்த ஸாபி லா ஸிபாஉ இல்லா ஸிபாஉக ஸிபாஅன் லா யுகாதிரு சகமா** – இறைவன் கூறியுள்ள சிகிச்கைக்கான வழிமுறைகள் மூலமாகவே நாம் சிகிச்கை செய்கிறோம். ஆனால், நாம் இதற்காக இறைவனையே சார்ந்து நிற்கின்றோம். ஏனென்றால் இறைவன் தான் குணமளிக்கக்கூடியவன். எல்லா சிகிச்சைகளும் பயனற்றுப் போகும்போது பிறகு துஆ மூலமாக அல்லாஹ் அருள் செய்கின்றான். இது தொடர்பான சம்பவங்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கையில் நமக்கு கிடைக்கின்றது. அவர்களது சஹாபாக்களின் வாழ்க்கையில் இது போன்ற சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களது வாழ்க்கையில் இதைப் போன்ற சம்பவங்கள் நடந்துள்ளன. அவர்களது சஹாபாக்களின் வாழ்விலும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்துள்ளன. அல்லாஹ்வின் அருளால் குணம் பெறுதல், மரணித்தவர்கள் உயிர்ப்பிக்கப்படுதல் ஆகியவற்றின் அடையாளங்களை இன்று வரை நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

**ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஒரு பெண் தனது மகனுடன் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தாள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இவன் பைத்தியமாகி விட்டான். சாப்பிடும் சமயங்களில் இவனது பைத்தியம்

வெளிப்படுகின்றது. அப்போது அவனுக்கு வலிப்பும் ஏற்படுகிறது. இதன் காரணமாக அவன் எங்கள் உணவை வீணாக்கி விடுகின்றான் என்று கூறினாள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த சிறுவனின் நெஞ்சத்தின் மீது தனது கையைத் தடவினார்கள். பிறகு அவருக்காக துஆ செய்தார்கள். அப்போது அந்த சிறுவன் வாந்தி எடுத்தான். அவனது வாயிலிருந்து கறுப்பாக ஒரு சிறிய பொருள் வெளியில் வந்தது. அதன் காரணமாக அந்த சிறுவன் முழுமையாக குணமடைந்தான்.

பிறகு இன்னொரு நபி மொழி அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. யஸீத் பின் அபி உபைத் அறிவிக்கின்றார்கள்:

நான் ஹஸ்ரத் ஸல்மா (ரலி) அவர்களின் பின்னங்காலில் ஒரு காயத்தின் அடையாளத்தைப் பார்த்தேன். அபூ முஸ்லிமே! இது என்ன அடையாளம்? என்று நான் அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர் கைபர் நாளில் எனக்கு இந்த காயம் ஏற்பட்டது. மக்கள் ஹஸ்ரத் சல்மாவிற்கு காயம் என்று கூறினார்கள். அப்போது நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றேன். அவர்கள் அந்த காயத்தின் மீது மூன்று முறை ஊதினார்கள். அதற்குப் பிறகு அந்த காயத்தால் இன்று வரை எனக்கு எந்த துன்பமும் ஏற்படவில்லை.

இத்தகைய அடையாளங்கள் இன்றைய காலக்கட்டத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பராகத் திகழ்கின்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வாழ்விலும் நமக்கு தென்படுகின்றது.

ஹஸ்ரத் முஹம்மது அலி கான் ஸாஹிப் அவர்களின் மகன் அப்துர் ரஹீம் கடுமையான காய்ச்சலால் நோய்வாய்ப்படடார். உயிர் பிழைப்பதற்கான எந்த அறிகுறியும் தென்படாமல் இருந்தது. அவர் மரணித்தவர் போன்ற நிலையில்தான் இருந்தார். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்காக துஆ செய்தபோது அவரது விதியில் எந்த மாற்றமும் இல்லை என்பது தெரிய வந்தது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த சமயத்தில் நான் இறைவனிடம் என் இறைவா! இவர் குணமடைய நான் உன்னிடம் சிபாரிசு செய்கின்றேன் என்று கூறினேன். அதற்குப் பதிலாக இறைவன் என்னிடம் **மன் ஸல்லதி யஸ்பஉ இன்தஹூ இல்லா பி இஸ்னிஹ்** – அல்லாஹ்வின் கட்டளை இல்லாமல் எவருக்கு பரிந்துரை செய்வதற்கான உரிமை இருக்கின்றது? என்று கேட்டான். அதற்குப் பிறகு நான் ஒன்றும் கூறாமல் அமைதியாக இருந்து விட்டேன். அதற்குப் பிறகு சிறிதும் தாமதமின்றி **இன்னக்க அன்தல் மஜாஸ்** – உமக்கு சிபாரிசு செய்வதற்கான அனுமதி வழங்கப்படுகிறது என்ற இல்ஹாம் வந்தது. அப்போது நான் மிகவும் மன்றாடி உருக்கத்துடன் துஆ செய்ய ஆரம்பித்தேன். அப்போது இறைவன் எனது துஆவை ஏற்றுக் கொண்டான். கல்லறையிலிருந்து வெளியேறியது போன்று அந்த சிறுவன் உயிர் தப்பினான். அவனிடம் ஆரோக்கியத்திற்கான அறிகுறிகள் தென்பட்டன. அவன் எந்த அளவு இந்த நோயால் மெலிந்து காணப்பட்டான் என்றால் அவனது அசலான உடற்கட்டை மிக நீண்ட நாட்களுக்குப் பிறகு தான் அவன் பெற்றான். இப்போதும் அவன் உயிருடன் இருக்கின்றான்.

**ஹஸ்ரத் மவ்லவி ே ர் அலி சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒருமுறை 1904 ஆம் ஆண்டு ஹஸ்ரத் முப்தி முஹம்மது சாதிக் சாஹிப் மிகவும் அதிகமாக நோய்வாய்ப்பட்டார்கள். நோய்வாய்ப்பட்ட அவர் மீது மிகவும் துன்பமும், வறுமையும் அவரை பற்றிக் கொண்டன. அதனால் அவரது மனைவி அவரது நிலையைப் பார்த்து இதுதான் அவரது கடைசி நொடிகளாக இருக்கும் என்று கருதினார். அவரது மனைவி அழுது புலம்பியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொஞ்சம் கஸ்தூரியை அவர்களுக்கு வழங்கி முப்தி சாஹிப் அவர்களுக்கு சாப்பிட கொடுக்கும்படி கூறினார்கள். பிறகு நான் அவர்களுக்காக துஆ செய்வேன் என்று கூறிவிட்டு அப்போதே உளூ செய்து விட்டு தொழுகையை நிறைவேற்ற நின்றார்கள். அது

சுபுஹ் நேரமாக இருந்தது. முப்தி சாஹிப் அவர்களுக்கு கஸ்தூரி உண்பதற்காக கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு முப்தி சாஹிபின் உடல்நிலை தேறியது. மேலும் கொஞ்ச நேரத்திலேயே அவர்களுக்கு நல்ல சுகம் கிடைத்தது.

**ஹஸ்ரத் முன்ஸி ஸபர் அஹ்மத் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:**

ஒருமுறை மவ்லவி முஹம்மத் அஹ்ஸன் சாஹிப் அம்ரோஹி தனது உறவினர் ஒருவரை அம்ரோஹாவிலிருந்தும் காதியானுக்கு அழைத்து வந்தார்கள். 50 அல்லது 60 வயதுடைய அந்த நபர் தடித்த உடலை உடையவராக இருந்தார். அவருக்கு காதில் எந்த அளவு செவிட்டுத்தன்மை இருந்ததென்றால் எப்போதும் அவரது காதில் ஒரு Rubber Tube இருந்து வந்தது. அது அவர் கேட்பதற்காக பயன்படுத்திய கருவியாகும். மிகவும் சத்தம் போட்டு பேசினால்தான் அவரால் ஓரளவு கேட்க முடியும். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் ஒருமுறை சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்த சமயத்தில் இந்த நபரும் அங்கு அமர்ந்திருந்தார். அவர் ஹஸ்ரத் சாஹிபிடம் ஹுஸூர் எனக்கு நீங்கள் கூறுவது முற்றிலுமாக கேட்கவில்லை என்று கூறினார். உங்களது சொற்பொழிவுகளை நான் கேட்பதற்காக நீங்கள் எனக்காக துஆ செய்யுங்கள் என்று கூறினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருக்கும்போதே அந்த நபர் பக்கம் திரும்பியவர்களாக இறைவன் வல்லமையுள்ளவன் என்று கூறினார்கள். அப்போதே அந்த நபரது காதுகள் திறந்தன. அவர் கேட்கும் திறனைப் பெற்றார். ஹுஸூர் உங்களது முழு சொற்பொழிவும் இப்போது எனக்கு கேட்கின்றது என்று அவர் கூறினார். அந்த Rubber Tube ஐயும் தனது காதிலிருந்து அவர் அகற்றி விட்டார்.

**ஹஸ்ரத் மியான் நதீர் ஹுஸைன் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

மியான் சிராகுத்தீன் சாஹிபின் முதல் மகனான எனது தந்தையரான மர்ஹமே ஈஸா சாஹிப் அவர்கள் பிறந்த சமயத்தில் இருந்து 5 வயதை அடையும் வரை அவர்களால் பேசவும் முடியவில்லை. நடந்து செல்லவும் அவர்களால் கற்றுக் கொள்ள முடியவில்லை. அப்போது ஒரு முறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லாஹூர் வந்திருந்தார்கள். அப்போது எனது தாத்தா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஹுஸூர் எனக்கு ஒரு மகன் மட்டும்தான் இருக்கின்றார். அந்த மகனும் இப்போது ஊமையாகவும், நடக்க முடியாத நிலையிலும் இருக்கின்றார். அவர் முழுமையான ஆரோக்கியத்தைப் பெற ஹுஸூர் துஆ செய்ய வேண்டும் என்று கூறினார்கள். அதைக் கேட்ட ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் மியான் சாஹிப் அந்த சிறுவனை என்னிடம் கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். அதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் சிறுவராக இருந்த கண்ணியத்திற்குரிய ஹகீம் சாஹிப் அவர்களை தனது மடியில் அமர்த்தியவாறு ஒரு நீண்ட துஆவை செய்தார்கள். பிறகு இறைவன் நாடினால் இந்த சிறுவன் சரியாகி விடுவான் என்று கூறினார்கள். அதற்குப் பிறகு ஹுஸூர் மீண்டும் லாஹூர் வந்த சமயத்தில் மியான் சிராகுத்தீன் சாஹிப் அவர்களிடம் இறைவன் நமது துஆக்களை ஏற்றுக் கொண்டான். உங்களது இந்த மகன் நன்றாக பேசக் கூடியவனாகவும் நன்றாக நடக்கக் கூடியவனாகவும் இருப்பான். நாங்கள் ஹகீம் சாஹிப் அவர்களை தமது 80 மற்றும் 90 வயதில்கூட தொடர்ந்து உரத்த குரலில் பேசுவதைக் கண்டு மிகவும் வியப்படைந்தோம்.

**ஷேக் ஜெய்னுல் ஆபிதின் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒரு முறை நான் காதியான் வந்தேன். அப்போது ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் கோல் கம்ராவில் (வட்ட அறையில்) இங்குமங்குமாக உலாவிக் கொண்டிருந்தார்கள். அப்போது எனக்கு கடுமையான இருமல் இருந்தது. அது கொஞ்சம்கூட குறையவில்லை. நான் அதற்காக பல சிகிச்சைகளை செய்து விட்டேன்.

ஹுஸூர் அவர்கள் என்னிடம் மியான் ஜெய்னுல் ஆபிதீன்? இங்கு எப்படி வந்தீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு நான் ஹுஸூர் எனக்கு கடுமையான இருமல் இருந்து வருகிறது. நான் இருமுகின்ற போது எந்த அளவு கடுமையாக அந்த இருமல் இருக்கின்றதென்றால் அடுத்த மூச்சு எனக்கு வருமா? என்றுகூட எனக்கு தெரியவில்லை என்று கூறினேன். இதைக் கேட்ட ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் இந்த இருமல் எவ்வளவு காலமாக உங்களுக்கு இருந்து வருகிறது? என்று கேட்டார்கள். அதற்க நான் கடந்த ஆறு மாதங்களாக இருந்து வருகிறது என்று கூறினேன். அதற்கு அவர்கள் எனக்கு இதுவரை இதுபற்றி நீங்கள் ஏன் தகவல் தெரிவிக்கவில்லை? இப்போது இந்த இருமல் பழையதாகி விட்டதே. வசதி படைத்தவர்களுக்குரிய

சிகிச்சையை செய்ய வேண்டுமா அல்லது ஏழ்மையான சிகிச்சை போதுமா? என்று கேட்டார்கள். அதற்கு நான் நீங்கள் எதை பொருத்தமாக கருதுகின்றீர்களோ அதை செய்யுங்கள் என்று கூறினேன்.

ஹஸ்ரத் ஹாமித் அலி சாஹிப் அவர்கள் பஸாரிலிருந்து பொருள்களை வாங்கி வந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த பொருள்கள் மூலமாக மருந்துக் குலுசைகளை தயார் செய்து ஷேக் ஜெய்னுல் ஆபிதீன் சாஹிப் அவர்களிடம் கொடுத்து ஜெய்னுல் ஆபிதீன் சாஹிப் அவர்களே! இந்த மருந்தின் மூலமாக உங்கள் இருமலும் அகன்று விடும். ஐந்து ரூபாயில் நீர் தடித்தும் விடுவீர் என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த ஐந்து ரூபாயையும் என்னிடமிருந்து வாங்கிக் கொள்ளுங்கள். உங்களது இருமலும் அகன்று விட்டது. நீங்கள் தடித்தும் விடுவீர்கள் என்று கூறினார்கள். நான் ஐந்து ரூபாயை மீண்டும் அவர்களிடம் கொடுத்தேன். அதற்கு வேண்டாம். அதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எவரிடமிருந்தும் Fees வாங்குவதற்கு தேவையில்லை. இது அவர்களது சீடர்களிடம் அவர்கள் காட்டிய அன்பின் வெளிப்பாடேயாகும்.

அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை வைப்பதுதான் அசல் விஷயமாகும். குணமளிக்கக்கூடியவன் அல்லாஹ் மட்டுமேயாவான். சிகிச்சை அளிப்பதும்கூட அல்லாஹ்வின் கட்டளையினாலேயே ஒருவருக்கு பலனைத் தர முடியும்.

ஹதீஸில் இவ்வாறு வந்துள்ளது.

மருந்து ஒரு கணிப்பேயாகும். அது அல்லாஹ்வின் கட்டளையினாலேயே நற்பலனை தரும். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களும் தனது இறைவனின் சிறப்புத் தன்மைகளை எடுத்துக் கூறும்போது அவனது அருளையும் அவனது வல்லமையையும் பற்றி எடுத்துக் கூறினார்கள். அவர்கள் வஇதா மரிழ்து ஃபஹுவ யஸ்பீன் – நான் நோயாளியாக ஆகும்போது இறைவனே எனக்கு குணமளிக்கின்றான் என்று கூறினார்கள். இங்கு நான் நோயாளியாகி விடுகின்றேன் என்று அவர்கள் கூறி மனிதன் சில நேரங்களில் தனது தவறுகள் காரணமாக நோயாளியாக ஆகின்றான் என்பதை சுட்டிக் காட்டுகின்றார்கள். பிறகு மனிதன் இயற்கைச் சட்டத்திற்கேற்ப அந்த தவறுகளின் காரணமாக பிடிக்கப்படுகின்றான். பிறகு அல்லாஹ் அருள் செய்தால்தான் மனிதன் நோயிலிருந்து குணமாகின்றான். அல்லாஹ்வின் அருள் இல்லை என்றால் மனிதன் எவ்வளவுதான் சிகிச்சை செய்தாலும் அவனால் அவனை காப்பாற்றிக் கொள்ள முடியாது.

நான் எனது தவறுகளின் காரணமாக நோயாளியாக ஆகும்போது அல்லாஹ் தனது அருளால் எனக்கு சுகத்தை வழங்குகின்றான். அல்லாஹ்வின் அருளாலேயே இந்த எல்லா மருந்துகளும் நமக்கு கிடைத்திருக்கின்றது. அவற்றைப் பயன்படுத்துவதன் மூலமாக அல்லாஹ்தான் குணமளிக்கின்றான்.

எனவே, இந்த எல்லா சிகிச்சைகளும் பயனளிப்பதற்கு அல்லாஹ்வின் அருள்களை நாம் ஈர்ப்பது அவசியமாகும். அது அல்லாஹ்வின் முன்பு குனிவதன் மூலமாகவே கிடைக்கும். பிறகு அல்லாஹ் தனது அடியார்களின் துஆக்களை செவிமடுத்து தனது குணமளிக்கும் பண்பை செயல்பட வைக்கின்றான். அதன் காரணமாக நோயாளி குணமடைகின்றான். சில நேரங்களில் துஆ மட்டுமே பலனைத் தருகிறது. இது பற்றிய சம்பவங்களை நான் கூறினேன்.

அல்லாஹ்வின் பண்புகளை முழுமையாகப் புரிந்து செயல்படும் வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. அல்லாஹ் எல்லா நோயாளிகளுக்கும் சுகத்தை வழங்குவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 19.12.2008**

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**